NILIS

# நூலக மற்றும் தகவல் முகாமைத்துவ டிப்ளோமா

## (கற்கைநெறிக் குறியீடு: DLIM)

DLIM 2022/2023

**1) அறிமுகம்**

இன்றைய தகவல் சமூகத்தில் தகவலைச் சரியாக நிர்வகிக்கும் திறன், எந்தவொரு தனிநபரின் கல்வி, தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையின் வெற்றிக்கு முக்கியமான காரணியாகும். இந்நோக்கத்திற்காக முறையான மற்றும் திறமையான நூலகம் மற்றும் தகவல் சேவை இன்றியமையாத ஒன்றாகும். எனவே, நூலகர்கள் மற்றும் தகவல் பணியாளர்களின் பங்கு தனித்துவமானது. தகவல் யுகத்தின் தேவைக்கேற்ப அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வளர்த்துக் கொள்வது அவசியம். தற்போது நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான துறையில் பணிபுரிபவர்கள் மற்றும் எதிர்காலத்தில் இத்துறையில் நுழைபவர்களின் அறிவு திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்தும் வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கைத் தகுதிக் கட்டமைப்பு மட்டம் 03 இல் தகவல் முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒரேயொரு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டமாகும்.

**2) இலக்குக் குழு**

பொது நூலகங்களில் ஏற்கனவே பணியாற்றுகின்ற அல்லது பொது நூலகத்தில் இணைய விரும்புகின்றவர்களுக்கும் பொருத்தமானது.

**3) நுழைவுத் தகுதிகள்**

GCE (A/L) சித்தி (**பழைய பாடத்திட்டம்**): 04 பாடங்களில் சித்தி
(**புதிய பாடத்திட்டம்**): 03 பிரதான பாடங்களில் சித்தி

**அல்லது**

GCE (O/L) இல் சித்தியுடன் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்களிற்கான தேசிய நிறுவனத்தினால் வழங்கப் பட்ட **பாடசாலை நூலகவியல் சான்றிதழ் (CSL)** அல்லது **பொது நூலகவியல் சான்றிதழ் (CPL)** அல்லது **பொது நூலகவியல் உயர்த்தர சான்றிதழ் (ACPL)** அல்லது **பாடசாலை நூலகவியல் உயர் சான்றிதழ் (ACSL)** அல்லது **நூலவியலில் உயர் சான்றிதழ் (ACL).**

**4) உத்தேசிக்கப்பட்ட கற்றல் விளைவுகள்**

கற்றல் நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் பங்குபற்றியவர் பின்வருவனவற்றை அடைவார்:

- ஒரு நிறுவனத்தின் தகவல் தேவையினை கண்டறில்
- பல்வேறு ஆதாரங்களிலிருந்து தகவலினை திறம்பட ஆராய்தல்
- நூலகம் மற்றும் தகவல் மையங்களில் உள்ள ஆவணங்களை சரியான முறையில் முகாமைத்துவம் செய்தல்
- மின்னணு சூழலில் கணிணிகளை திறமையாக பயன்படுத்தல்

**5) கற்றல் நெறி உள்ளடக்கம்**

1. நூலகம் மற்றும் தகவல் நிபுணத்துவம்
2. துகவல் மூலங்கள் மற்றும் சேவைகள்
3. ஆவண முகாமைத்துவம்
4. தகவல் முகாமைத்துவம்
5. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - I
6. நூலியல் ஒழுங்கமைப்பு -1
7. அலுவலக இயந்திரங்களின் பயன்பாடு
8. துனிப்பட்ட வளர்ச்சித் திறன்கள்
9. தகவல் வல்லுநர்களுக்கான ஆங்கிலம் - I
10. செயற்திட்ட அறிக்கை

6) **கற்றல் நெறியின் முக்கியத்துவம்:** படத்தில் காட்டியுள்ளவாறு, DLIM ஐ முடிப்பதன் மூலம் SLFQ மட்டம் 4 இல் NILIS நடாத்தும் உயர் டிப்ளோமா I மற்றும் II (HDLIM I மற்றும் II) போன்றவற்றை ஒருவர் தொடரக் கூடியதாக இருக்கும்.




7) **கால அளவு:** பன்னிரண்டு (12) மாதங்கள்

8) **போதனா மொழி:** சிங்கள அல்லது தமிழ் (கற்கை நெறிகள் எம் மொழியிலாயினும் அக்குறித்த மொழி மூலத்தில் போதுமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விண்ணப்பித்தால் மட்டுமே கற்கை நிகழ்ச்சி நடாத்தப் படும்).

9) **கற்றல் முறை/விதம்:** மறு அறிவித்தல் வரை சகல வகுப்புகளும் நிகழ்நிலையில் நடத்தப்படும்.

10) **மதிப்பீட்டு முறைமை:**
கற்பிக்கப் படும் ஒவ்வொரு பாடத்திற்கும் சகல வகுப்பறை ஒப்படைகள்/ மதிப்பீடுகள்/ தவணைப் பரீட்சைகளிலிருந்து 50% சேர்க்கப் படும். எஞ்சிய 50% தவணை இறுதியில் வைக்கப் படும் எழுத்துப் பரீட்சையிலிருந்து சேர்க்கப் படும். செயற் திட்டத்திற்கு 100% இலிருந்து புள்ளி வழங்கப் படும். மறு தீர்மானம் வரை சகல இறுதித் தவணைப் பரீட்சைகளும் நிகழ்னிலையிலேயே வைக்கப் படும்.

11) **பாடசாலை நூலகவியல் டிப்ளோமாவின் சான்றிதல் பெறும் வழி**
செயற் திட்டம் உள்ளடங்கலாக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது திறமைச் சித்தி (C - minimum of 50%) பெற்றிருக்க வேண்டும். D அல்லது E சித்திகளை ஒருவர் மூன்று அல்லது அதற்குக் குறைந்த பாடங்களுக்கு பெறப்பட்டிருப்பின் அவற்றை மீளவும் எழுத முடியும்.

12) **DLIM கற்கை நெறிக் கட்டணங்கள்:**
முழுமையான கட்டணம் **Rs.28,350=.** முழுமையாகவோ தவ்ணை முறையிலோ கட்டப்படலாம்

| தவணை | தொகை | காலக் கெடு |
|---|---|---|
| முதல் தவணை | Rs.16, 600 | பதிவின் போது |
| இரண்டாம் தவணை | Rs.11, 750 | முதலாம் தவணைப் பரீட்சைக்கு முன்னதாக (6 மாதத்தினுள்) |

13) **விண்ணப்ப முடிவுத் திகதி: 07th July 2022**

14) **கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி: August 2022**

15) **விண்ணப்பிக்கும் நடைமுறை:**
1. விண்ணப்பப் படிவத்தை எமது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கவும் https://nilis.cmb.ac.lk/home/news/2022/new_2022/2208/
2. தெளிவாகப் படிவத்தை நிரப்பவும்
3. ரூ. 250 இனை விண்ணப்ப நடைமுறைக்காக **மக்கள் வங்கி, திம்பிரிகஸ்யாய கிளையில்** கணக்கு இலக்கம் **086100101191736** இற்கு வைப்புச் செய்யவும். விண்ணப்பப் படிவத்தின் தரப்பட்ட கூட்டினுள் அசல் ரசீதை ஒட்டவும்.
4. பிறப்புச் சான்றிதழ், GCE (O/L), GCE (A/L) சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை (NIC) என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.
5. கடித உறையின் இடது மேல் மூலையில் கற்கை நெறி குறியீட்டை எழுதவும்.
6. விண்ணப்பத்தையும் ஏனைய இணைப்புகளையும் பினவரும் முகவரிக்கு அனுப்பவும்

Senior Assistant Registrar
National Institute of Library & Information Science (NILIS)
University of Colombo, Colombo - 07